ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2496/38 - 2026 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2026.07.10

2496/38 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ், எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க**<br>
நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார<br>
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,<br>
கொழும்பு 01.<br>
2026, யூலை 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2026 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பொருட்கள் இறக்குமதியைத் தடை செய்தல் தொடர்பான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. வலுக்கட்டாயமான உழைப்பைக் கொண்டு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, அகழ்ந்தெடுக்கப்படும், உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரித்து முடிக்கப்படும் எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்தல் இத்தால் தடைசெய்யப்படுகின்றது.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தீர்மானங்களைக் கருத்திற்கொண்டு, இவ் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட வேண்டிய பொருட்கள், நிறுவனங்கள் அல்லது நாடுகளை அமைச்சரினால் அவ்வப்போது அறிவிக்க முடியும்.

4. அறிவிக்கப்பட்ட நிறுவனம் அல்லது நாடொன்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இறக்குமதி செய்பவர்களால், இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ள பொருட்கள் வலுக்கட்டாயமான உழைப்பைக் கொண்டு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அகழ்ந்தெடுக்கப்படவில்லை, உற்பத்தி செய்யப்படவில்லை அல்லது தயாரித்து முடிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஆவண அடிப்படையிலான சாட்சியங்கள், வெளிப்படுத்தல்கள் அல்லது சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, சுங்கப் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடைய ஒழுங்குபடுத்தல் அதிகாரியாவார் என்பதுடன், சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க இவ் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய நிர்வாக நடைமுறைகளைக் குறிப்பிட்டு திணைக்கள ரீதியான கட்டளைகளை வெளியிடலாம்.

EOG 07 - 0149

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.